**தலைப்பு 204 – இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு - 204 இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 14 இல் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 222.5 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 221.2 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 1.3 மில்லியன் அதாவது 0.5 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 128.0 | 126.8 | 1.2 | 0.9 |
| மூலதனம் | 94.5 | 94.4 | 0.1 | 0.1 |
| மொத்தம் | 222.5 | 221.2 | 1.3 | 0.5 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**2.2.1 பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 20401 இன் கீழ் திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 4.75 | 4.22 | 2.50 | 3.78 | 20.00 | 8.86 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் வரும் 6000/0000/00/0003/0095/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 20,000 ஆக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டமை**

03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி ரூபா 69,112 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் 22 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரையிலான காலப்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட ரூபா 86,930 தொகையான கடன் மீதிகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.3.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

திணைக்களத்தால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான அந்த அறிக்கை 2016 யூலை 12 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 இணங்காமைகள்

#### 3.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 207,255 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான 11 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 753(1) மற்றும் (3) | 1,185,450 | அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்காக சீரூடைகள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தலிக்கும் போது பொருள் பெறுவனவு மற்றும் விநியோகக் கட்டளை விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 177 மற்றும் 187 | 1,485,830 | 2015 யூன் 4 ஆந் திகதி முதல் 2015 செப்தெம்பர் 7 ஆந் திகதி வரை கதிர்காமம் சுற்றுலா விடுதியில் சேகரிக்கப்படுகின்ற நாளாந்த வருமானத்தை தினந்தோறும் வங்கியில் வைப்பிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.5 செயலாற்றல்**

**3.5.1 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

**இந்து சமயத் தலங்களுக்காக வழங்கப்பட்ட நிதிகள்**

இந்து சமயத் தலங்களுக்காக ரூபா 1,500,000 தொகை திணைக்களத்தினால் நிதியுதவியாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகன்றன.

(அ) தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட முறையான மதிப்பீடு இன்றி நிதிகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மானியங்களின் பயன்படுத்தல் தொடர்பாக திணைக்களத்தினால் பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பழுதுபார்த்தலுக்குரிய ரூபா 1,500,000 தொகையான செலவினத்திற்காக பொருட்களைக் கொள்வனவு செய்தல், சேவைகள் வழங்குதல் போன்றவற்றின் பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**3.6.1 கதிர்காமம் சுற்றுலா விடுதி நிர்மாணம்**

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற கதிர்காமம் சுற்றுலா விடுதிக்காக புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 29,475,632 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கதிர்காமம் சுற்றுலா விடுதி நிர்மாணத்தின் போது உடன்படிக்கை செய்யப்பட்ட 4 விடயங்களின் பணிகள் நிறைவேற்றப்படாதிருக்கும் போது திணைக்களத்தால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் சீர் செய்யப்படாமல் ஒப்பந்தக்காரரிடமிருந்து நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 2,947,563 தொகையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) சுற்றுலா விடுதியின் கீழ் மாடியில் அறையொன்று சுற்றுலாவிடுதி பொறுப்பாளரின் உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த சுற்றுலா விடுதியின் ஒரு அறை ஒரு நாளைக்காக ரூபா 4,000 அறவிடப்படுகின்றமையால் மேற்கூறப்பட்ட அறைக்காக மாற்றுவழியொன்றை எடுத்து அரசாங்க வருமானத்தை உயர்த்துவதற்கு திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) கட்டிடத்தின் ஆரம்பத் திட்டத்தின் படி தரைமாடியின் அரைப்பகுதிக்குச் சமமான காணி அளவொன்று சமயலறைக்கும் உணவு அறைக்கும் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட காணியின் அளவு விளைவற்றுக் காணப்பட்டது. அது கவனத்திற் கொள்ளப்பட்டமையின் காரணமாக அந்தக் காணி அளவில் மலசலகூடத்துடன் ஓய்வு அறையொன்றை அமைப்பதற்காக கதிர்காமம் பிரதேச செயலகத்திலிருந்து ரூபா 437,936 தொகையான மதிப்பீடொன்று பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்தப் பணிகளை நிறைவேற்றுதல் கதிர்காமப் பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்தப் பணிக்காக முறையான உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) அந்த நிர்மாணம் கதிர்காமம் பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மேற்பார்வை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் திணைக்கள மட்டத்தில் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் பிரதான ஒப்பந்தக்காரரின் பணிகளுடன் ஒப்பீடு செய்தபோது குறைந்த நியமத்தில் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக கட்டிடத்தின் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.6.2 அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளைப் பின்பற்றாமை**

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 அல்லது 3.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் போட்டியாளர் கேள்வி கோரப்படாமல் கதிர்காமம் சுற்றுலா விடுதிக்காக ரூபா 1,315,500 பெறுமதியான தளபாட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அத்தளபாடங்களுக்கிடையே ரூபா 329,000 கூட்டுத் தொகையான 5 அலுமாரிகளும், 2 சாப்பாட்டு மேசைகளும் நியமத்திற்குப் புறம்பாக இருந்ததுடன் பாவனைக்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டது.

**3.7 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 04 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 157 | 113 | 44 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 17 | 07 |
| | மொத்தம் | 188 | 134 | 54 |